ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1861/31 - 2014 මැයි මස 07 වැනි බදාදා - 2014.05.07
1861/31 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாணத்தின் மாகாண சபை**

மேல் மாகாண சபையின் 2014 நகர்ப்புற விவசாயக் கொள்கை

மேல் மாகாண சபையினால் 2011, ஒகத்து மாதம் 17 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டு, மேல் மாகாண கௌரவ ஆளுநரினால் 2011, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ள, மேல் மாகாண சபையின் நகர்ப்புற விவசாய கொள்கை 2014, மே மாதம் 23 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்பட வேண்டுமென மேல் மாகாண சபையின் விவசாய, கமநல அபிவிருத்தி, சிறிய நீர்ப்பாசனம், கைத்தொழில், சுற்றாடல் மற்றும் கலை, கலாசார நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சர் சட்டத்தரணி உதய பிரபாத் கம்மன்பிள்ள ஆகிய நான் இதன் மூலம் உத்தரவிடுகின்றேன்.

சட்டத்தரணி உதய பிரபாத் கம்மன்பிள்ள,
மேல் மாகாண சபையின் விவசாய, கமநல அபிவிருத்தி,
சிறிய நீர்ப்பாசனம், கைத்தொழில், சுற்றாடல் மற்றும் கலை,
கலாசார நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சர்.

விவசாய, கமநல அபிவிருத்தி, சிறிய நீர்ப்பாசனம், கைத்தொழில்,
சுற்றாடல் மற்றும் கலை, கலாசார நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சு,
த. பெ. இல. 566,
ஸ்ரீமத் மாக்கஸ் பெர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07,
2014, மே 5.

**நகர்ப்புற விவசாயக் கொள்கை கூற்று - மேல் மாகாணம்**

1. நகர்ப்புற மக்களை ஆரோக்கியமானவர்களாக மாற்றியமைப்பதற்கு புதிய மற்றும் பாரம்பரிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதனூடாக சூழல் நேயமிக்கதாக நகர்ப்புற விவசாய செயற்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் அதனூடாக பொது மக்களின் வருமானம் மற்றும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல்.

2. அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரசுகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக சங்கங்கள் மற்றும் நபர்களை இணைத்துக் கொண்டு நகர்ப்புற விவசாய செயற்பாடுகளை ஒருங்கிணைந்த பிரவேசத்தினூடாக வலுவூட்டுதல்.

3. நகர்ப்புற விவசாயத்தின் போது சூழல் நேயமிக்க செயற்பாடுகளாகும் குப்பை கூழங்களை மீள் சுழற்சி செய்தல், மழை நீரை பயன்படுத்துதல், பயன்படுத்திய நீரை சுத்திகரிப்புச் செய்து மீளப் பயன்படுத்துதல் மற்றும் நீரை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்துதல்.

4. நகர்ப்புற விவசாய செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக நகர்ப்புற வீடுகள் சார்ந்த வளாகங்கள், நிறுவன வளாகங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான பயன்படுத்தாத நிலங்களின் கிடையான மற்றும் செங்குத்தான வெளிகளை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்திக்கொள்ளுதல்.

5. நகர்ப்புற விவசாய செயற்பாடுகள் மற்றும் முயற்சிகளுக்கு பல்வேறு கொடைகள், கடன் வசதிகள் மற்றும் காப்புறுதி முறைகளை உருவாக்குதல்.

6. நகர்ப்புற விவசாயம் விவசாய சுற்றுலா வர்த்தகம் போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.

7. ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்களின் பாடவிதானத்திற்கு நகர்ப்புற விவசாயத்தை உட்புகுத்துதல்.

8. நகர்ப்புற விவசாய மேம்பாட்டிற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிவை மற்றும் அனுபவத்தை பரிமாற்றிக் கொள்ளவும் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்து கொள்ளவும் வசதிகளை வழங்குதல்.

9. நகர்ப்புற விவசாய மேம்படுத்தலின் நிலைபேறுடைய மற்றும் முன்னேற்றத்திற்கு புதிய ஆராய்ச்சிகளை ஊக்குவித்தலும் வசதிகளை வழங்குதலும்.

10. நகர்ப்புற விவசாய மேம்படுத்தலுக்கு ஊடகங்களை வினைத்திறனாக பயன்படுத்திக் கொள்ளுதல்.

5-595

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.